சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்,
நாள்.22.05.2023

<u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் வைகாசி மாதம் 15-ஆம் நாள் மே திங்கள், நாள்.29.05.2023 திங்கள் கிழமையன்று மாலை 03.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துள்கொள்கிறேன்.

(ஒப்பம்) ரா.அய்யம்மாள்,
நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

## கூட்டப்பொருள்

| | |
|---|---|
| **பொருள் எண்.1**<br>சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல்/2023 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 424, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண் .2**<br>சின்னமனூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல்/2023 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 425, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.3**<br>அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந4-1) துறை, நாள்.27.07.2022-இன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில், விதி எண்.110-இன் கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பு மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.03.2023ம் தேதிய ந.க.17404/2022/எம்1 எண்ணிட்ட கடிதத்தின்படி அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வண்டிப்பேட்டை அருகில் ஒருங்கிணைந்த சமையல் கூடம் கட்டும் பணி தொகை ரூ.32.50 இலட்சத்தில் (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள 11.04.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | |

| | |
|---|---|
| 1. திரு.கே.வனராஜ், கூடலூர் –மதிப்பீட்டினைவிட 0.05% குறைவு<br>2. M/s PRS Construction, முத்துலாபுரம் - மதிப்பீட்டினைவிட 0.02% குறைவு | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வனராஜ், கூடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2.மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 426, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |
| **பொருள் எண்.4**<br>சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (2023-2024 முதல் 2027-2028 வரை உள்ள) ஐந்து ஆண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்கும் கட்டணம் தொகை ரூ.2,18,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.<br>3.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 427, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.5**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் வண்டி எண்.TN60Z5198 க்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.407, நாள்.30.03.2023 அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணியை மேற்கொள்ள 06.04.2023ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | சாய் மல்டி பிரான்ட் கார் கேர்,<br>சின்னமனூர் | ரூ.51,500/- (Without GST) |
| 2. | AMN மோட்டார்ஸ், கம்பம் | ரூ.55,100/-(Without GST) |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் M/s. சாய் மல்டி பிரான்ட் கார் கேர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s. சாய் மல்டி பிரான்ட் கார் கேர், சின்னமனூர் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 428, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சியில் பொது நிதியின் கீழ் (நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) வேம்படிகளம் ரோடு மற்றும் தினசரி மார்க்கெட் தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் அடைப்பினால் சேதமடைந்துள்ள தார்ச்சாலையினை புதுப்பிக்கும் பணி தொகை ரூ.77.00 இலட்சம் (ரூபாய் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடிவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1320/2023/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 429, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் வாகனம் எண்.TN60S6634க்கு சில மராமத்துப் பணிகளை அவசர அவசியம் கருதி சரி செய்யும் பணிக்கு தேனி மகேந்திரா கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற M/s Automotive Manufactures Pvt Ltd., Theni என்ற நிறுவனத்தில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.40000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7057/2014/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 430, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஜே.சி.பி வாகனம் எண்.TN60BY1864-க்கு சில பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்யுள்ளதால் ஜே.சி.பி கம்பெனி அங்கீகாரம் பெற்ற கம்பம் ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.28,000/- (ரூபாய் இருபத்து எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.1156/ 2023/இ1) |

| | |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 431, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.22, தினசரி மார்க்கெட் தெரு மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய நுழைவு வாயில் உள்ள சிறுபாலங்கள் மிகவும் சேதமடைந்து இருசக்கர வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை மறு சீரமைப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.54/- இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 432, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, அய்யனார்புரத்தில் உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து இருசக்கர வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை மறு சீரமைப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.68/- இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 433, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவிலிருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் பாதையில் அமைந்துள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும் மற்றும் பாதசாரிகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை மறு சீரமைப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.55/- இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 434, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**

15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-23 (Tied Grant) நிதியின் கீழ் இந்நகராட்சிக்கு புதியதாக 6 எண்ணம் இலகுரக வாகனம் வாங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மாலை முரசு தினசரி நாளிதழிலில் 01.04.2023ம் தேதியன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.16,380/- (ரூபாய் பதினாறாயிரத்து முண்ணூற்றி எண்பது மட்டும்) M/s Malai Murasu, Madurai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1279/2023/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 435, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.13**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 07.03.2023ம் தேதிய ந.க.11919/2022/சிஎப்சி1 எண்ணிட்ட கடிதம் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 21.03.2023ம் தேதிய ந.க.3096/2022/பி2 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Untied Grant) 2022-23-இன் கீழ் தொகை ரூ.60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தினமணி தினசரி நாளிதழிலில் பிரசுரம் செய்தைமைக்கு தொகை ரூ.25,452/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரத்து நானூற்றி ஐம்பத்து இரண்டும் மட்டும்) M/s Express Publications (Madurai) Private Limited, Madurai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1034/2023/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 436, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை மாலை தமிழகம் தினசரி நாளிதழில் 15.03.2023 அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.15,330/- (ரூபாய் பதினைந்தாயிரத்து முண்ணூற்றி முப்பது மட்டும்) மாலை தமிழகம், சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1359/2022/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 437, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**

உத்தமபாளையம் உட்கோட்ட நடுவர் / வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் 22.02.2023ம் நாளிட்ட ந.க.5601/2022/அ4 எண் செயலாணையின்படி, சின்னமனூர் நகரம் வார்டு-ஏ, பிளாக்-14, சர்வே எண்.4/7-ல் 0.0076.2 சதுரமீட்டரில், திருமதி.சாந்தி பெயரில் நகரளவைக் கணக்குகளில் தாக்கலாகியுள்ள இடத்தின் வடக்கு புறம் நகராட்சி மூலம் கற்கள் பதித்து கழிவு நீர் வடிகால் அமைக்கப்பட்டு பொதுப்பாதையாக உள்ள இடத்தில் கட்டுமானப்பணிக்கு இடையூறாக உள்ள இரண்டு எண்ணம் தென்னை மரங்களை பொது ஏலம் விட அனுமதித்து வரலான உத்திரவின்படி, பொது ஏலம் உடன் ஒப்பந்தப்புள்ளிகள் 10.04.2023 அன்று கோரியதில், ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளாத நிலையில், ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க சம்மதித்து, டேவணித் தொகை செலுத்திய கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.கா.வனராஜ், சின்னமனூர் | ரூ.2150/- |
| 2. | PRS Construction<br>திரு.R.பரமானந்தன், முத்துலாபுரம் | ரூ.2300/- |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :<br>- | 1.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2இல் கண்ட முத்துலாபுரம் PRS Construction என்ற நிறுவனத்தின் ரூ.2300/- தொகை கூடுதலாக உள்ளது.<br>2.மேற்படி இரண்டு தென்னை மரங்களின் உத்தேச மதிப்பீடு குறித்து சின்னமனூர் வனச்சரகம் அவர்களுக்கு விவரம் தெரிவிக்க 27.03.2023இல் கடிதம் எழுதியதில் சின்னமனூர் வனச்சரகம் அவர்கள் தனது 29.03.2023ம் தேதிய ந.க.64/2023 எண் கடிதத்தில் இரண்டு மரங்களின் சந்தை மதிப்பு ரூ.2000/- அதில் போக்குவரத்து செலவு ரூ.300/- , வெட்டுக்கூலி ரூ.250/- மற்றும் குத்தகைதாரர் இலாபம் ரூ.180/- நீக்கி இரண்டு மரங்களுக்கு ரூ.1270/- எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, கூடுதலாக ரூ.2300/- ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s.PRS Construction அவர்களின் கூடுதல் தொகையினை ரூ.2300/-யினை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 438, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் கழிவுநீர் தொட்டிகளில் சேகரமாகும் கழிவுகளை பாதுகாப்பான முறைகளில் பயிற்சி பெற்ற கழிவு நீரகற்று வாகனங்கள் மூலமே அகற்றப்பட வேண்டும் என்ற அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் 12.04.2023 அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.7,560/- (ஏழாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) KAL PUBLICATION (P) LTD, MADURAI அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 439, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.17**

அரசாணை (பல்வகை) எண்.166 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ –IV) துறை நாள்:23.11.2016-ன் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு, நகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தனியார் (Private Service Provider) வாயிலாக துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சிப் பகுதியில் ஒரு அரசு தொடக்கப் பள்ளியும், ஐந்து நகராட்சி தொடக்கப் பள்ளிகளும், மூன்று நடுநிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு உயர் நிலைப் பள்ளி செயல்பட்டு வருகின்றன. மேற்படி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை இந்நகர்மன்ற தீர்மான எண்.419 நாள் 30.03.2023-ன் படி, அனுமதி பெற்று 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணி பார்த்து வந்த திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் பராமரிப்பு காலம் 30.04.2023 அன்று முடிவு பெறுவதால், 01.05.2023 முதல் 31.04.2024 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு இரண்டு ஆண் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் பத்து பெண் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய விகிதத்தில் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,00,000 /- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3.மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பார்த்து வந்த திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி அவர்கள் மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 440, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் கொரோனா போன்ற நோய்கள் வராமல் / பரவாமல் தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு வீடாகச் சென்று கொசுப் புழுக்களை ஒழிக்கும் பணிக்கு அபேட் மருந்து ஊற்றும் பணி மற்றும் நிலவேம்பு குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்வதற்கு சுய உதவி குழுக்கள் மூலம் 37 தற்காலிக பணியாளர்களை 01.03.2023 முதல் 31.05.2023 வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலிக்கு வைத்துக்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.391, நாள்.28.02.2023-ன் படி அனுமதி வழங்கியுள்ளதால், அதனை பின்பற்றி திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேலும் 01.06.2023 முதல் 31.05.2024 வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக் கூலி அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் 37 தற்காலிக பணியாளர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவனித்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3.மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை, ஏற்கனவே பார்த்து வந்த திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி அவர்கள் மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

| **நகர்மன்ற தீர்மான எண் :** | 441, நாள்.29.05.2023 |
|---|---|
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தேவையான பணியாளர்கள் மற்றும் பேட்டரி வாகனங்கள் / தள்ளுவண்டிகள் / LCV வாகனங்களுடன் வீடு, வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்து திடக்கழிவு மேலாண்மை செயலாக்க மையத்தில் ஒப்படைக்கும் பணிக்கு 25.01.2023ம் தேதிய மன்ற தீர்மானம் எண்.342-இன்படி அனுமதி பெறப்பட்டு 24.03.2023ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, பணியினை மேற்கொள்வதற்கு 4 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. Raam & Co, Madurai
2. V Aruna Enterprices, Chinnamanur
3. PRS Constructions, Muthulapuram
4. Excell Neat and Tidy Agency, Dindigul

மேற்படி பணிக்கு வரப்பெற்ற 4 நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஒப்பந்த விதிகளுக்குட்பட்டு இருந்ததால் அந்நிறுவனத்தின் விலை விலைப்புள்ளி மட்டும் திறக்கப்பட்டதில், அந்நிறுவனம் கோரிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. ஒரு டன்னுக்கு | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ ஒரு டன்னுக்கு | மதிப்பீட்டை விட குறைவு |
|---|---|---|---|---|
| 1. | Raam & Co, Madurai | 4125.00 | 4104.00 | 0.50% |

| **அலுவலகக் குறிப்பு :-** | 1.மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.50% குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.Raam & Co, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
|---|---|

| | |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 442, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சியில் பொது நிதியின் கீழ் (நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) வேம்படிகளம் ரோடு மற்றும் தினசரி மார்க்கெட் தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கைட இணைப்பு மற்றும் அடைப்பினால் சேதமடைந்துள்ள தார்ச்சாலையினை புதுப்பிக்கும் பணி தொகை ரூ.77.00 இலட்சம் (ரூபாய் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.04.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.M/s PRS Construction, முத்துலாபுரம் – மதிப்பீட்டினைவிட 0.03% குறைவு

2.திரு.கே.வனராஜ், கூடலூர் – மதிப்பீட்டினைவிட 0.06% அதிகம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s PRS Construction, முத்துலாபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 443, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | |

.......

**பொருள் எண்.21**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.3, சாமிகுளம் பகுதியின் சர்வே எண்.590, வார்டு எண்.A, பிளாக் எண்.7/1-இல் அமைந்துள்ள 2.97 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பழைய உரக்கிடங்கில் சுமார் குவிந்துள்ள 64484M3 கன மீட்டர் பழைய தேக்க திடக்கழிவுகளை பயோ மைனிங் முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி பழைய உரக்கிடங்கில் உள்ள

| |
|---|
| குப்பைகளை சர்வே செய்யும் பணி மேற்கொள்வதற்கு The Director, Centre for Environmental Studies., Anna University, Chennai அவர்களின் 03.05.2023ம் தேதிய கடித எண்.0018/CES/BM/Chinnamanur/2023-24-இன்படி கலந்தாலோசகர் கட்டணத் தொகை ரூ.1,77,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) "The Director Centre for Sponsored Research and Consultancy (CSRC), Anna University, Chennai" அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.9807/2022/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 444, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

......

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சியில் பொது நிதியின் கீழ் (நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) வேம்படிகளம் ரோடு மற்றும் தினசரி மார்க்கெட் தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் அடைப்பினால் சேதமடைந்துள்ள தார்ச்சாலையினை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி 13.04.2023ம் தேதியன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.18850/- (ரூபாய் பதினெட்டாயிரத்து எண்ணூற்றி ஐம்பது மட்டும்) M/s Accord Advertising Agencies, Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 445, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

......

**பொருள் எண்.23**

அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந4-1) துறை, நாள்.27.07.2022-இன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில், விதி எண்.110-இன் கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பு மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.03.2023ம் தேதிய ந.க.17404/2022/எம்1 எண்ணிட்ட கடிதத்தின்படி அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வண்டிப்பேட்டை அருகில் ஒருங்கிணைந்த சமையர் கூடம் கட்டும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி 28.03.2023ம் தேதியன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.21840/- (ரூபாய் இருபத்து ஓராயிரத்து எண்ணூற்றி நாற்பது மட்டும் M/s தினமலர், மதுரை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 446, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண்.24**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, இராதா கிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் 3.99 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 2013 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது மக்கள் தொகை அதிகரித்து விட்டதாலும், நகராட்சிக்கு சொந்தமான கட்டடிங்கள் மற்றும் சுகாதார வளாகங்களும் இணைக்கப்பட்டுள்ளதால் அதிக அளவில் சுத்திகரிப்பு செய்ய வேண்டியுள்ளது. தற்போது பயன்பாட்டிற்கு வந்து 10 வருடங்கள் ஆகிவிட்டதால், சுத்திகரிப்பு நிலையத்தில் Collection Inlet. Course Screen Unit, Fine Screen Unit, Grid Clarifier, Screen Conveyor, Aerator, Panel Board, Secondary Clarifier, DI Fuser, Centrifugal Pump, Chlorine Line, Crane, Polimer Dosage Pump ஆகியவற்றில் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. மேற்படி இனங்களுக்கு புதிதாக பாகங்கள் மாற்றி பழுது நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் தற்போது சுத்திகரிப்பு நிலையத்தில் CGF திட்டத்தின் கீழ் OCEMS –Online Monitoring System நிறுவப்பட்டுள்ளதால், சுத்திகரிக்கப்பட்ட நீரின் காரணிகள் நேரடியாக தமிழ்நாடு மாசுக்

| | |
|---|---|
| கட்டுப்பாட்டு வாரியத்திற்கு சென்று வரும் என்பதாலும், இத்திட்டத்தின் முக்கியத் துவம் கருதியும், பாதாள சாக்கடை திட்டத்தினை செம்மையாக தொடர்ந்து செயல்படுத்திடவும், OCEMS –ஆன்லைன் திட்டத்தினை முறையாக செயல்படுத்திடவும், மேற்கண்ட பழுது நிவர்த்தி பணிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** : - | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 447, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ....... | |

**பொருள் எண்.25**

இந்நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் Tied Grant 2022-23-இன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 6 எண்ணம் Light Commercial Vehicle (LCV) வாகனங்கள் வாங்கி விநியோகம் செய்யும் பணிக்கு குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி கோரி தினசரி நாளிதழில் 04.05.2023ம் தேதியன்று விளம்பரம் செய்தமைக்கு ஆன செலவினம் ரூ.22680/- (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து அறநூற்றி எண்பது மட்டும்) M/s.தினமலர், மதுரை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 448, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ....... | |

**பொருள் எண்.26**

சின்னமனூர் நகராட்சியில் ஏற்கனவே உள்ள 960 எண்ணம் CFL விளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றுவதற்கு State Urban Infrastructure Develeopment Programme திட்டத்தின் கீழ் ரூ.106.70 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30298/2022/WB,

நாள்.04.11.2022-இன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 28.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் M/s.Hariway Lines Pvt Ltd., புதுக்கோட்டை என்பவருக்கு 17.02.2023ம் அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர் மேற்படி பணிக்கு வாங்க உள்ள LED விளக்குகள் மற்றும் பாகங்களின் தரம் மற்றும் செயல் திறனை சோதித்து சான்றிதழ் வழங்கவும், CFL விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியுடவுன் அதனால் ஏற்படும் ஆற்றல் சேமிப்பு விவரங்களை (Energy Savings Validation Report) வழங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வீதம் ஆறு வருடங்களுக்கு செயல்படுத்திட மூன்றாம் தரப்பு நிறுவனம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. (Third Party Inspection) அதற்கான கட்டணத் தொகை ரூ.1,63,192/. (Including GST) யினை M/s ESCO, Account Number:343201000086, ICICI Bank, Santhome High Road Branch, சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 11. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3.அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 449, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண்.27**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் வண்டி எண்.TN 60 W 1755 பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.17000/- (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>3.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 450, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண்.28**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண்.5901A1A-ல் கட்டுப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதினை எதிர்த்து திரு.ஹ.சையதுஅப்தாகிர் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.8965/2023-ன் கீழ் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி நிர்வாகம் சார்பாக திரு.கே.ஹேமகார்த்திகேயன், MA., BL., வழக்கறிஞர் என்பவர் வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கு வழக்கறிஞர் வழக்கு கட்டணமாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கும்பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 451, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

.......

**பொருள் எண்.29**

சின்னமனூர் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தின் வடக்கு பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் மற்றும் பொறுப்புத்தொகை வசூலிக்கப்படுவது குறித்து நகர்மன்ற தீர்மானம் எண்.403, நாள்.30.03.2023இல் அனுமதி வழங்கப்பட்டதின்பேரில் கட்டணம் மற்றும் பொறுப்புத் தொகை தொடர்பாக ஆட்சேபணை ஏதும் இருப்பின் பொது மக்கள்

| | |
|---|---|
| இந்நகராட்சி அலுவலகத்தில் ஒரு மாத காலத்திற்குள் தெரிவித்துக்கொள்ளுமாறு விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்சேபணை ஏதும் வரப்பெறாத நிலையில் கட்டணம் மற்றும் பொறுப்புத் தொகையினை உறுதி செய்து அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 452, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ……. | |

**பொருள் எண்.30**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கருங்கட்டான்குளம் கிராமம், சர்வே வார்டு-டி, பிளாக்-10, டி.எஸ்.எண், சர்வே எண்.19/1,2,3,4, 25/2 மற்றும் 25/3 ல் கட்டுப்பட்டுள்ள 14850 ச.மீ பரப்பளவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு காலியிடமாகும். மேற்படி இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு.சசிக்குமார் என்பவரது 03.02.2023 தேதிய விண்ணபத்தினை இந்நகராட்சியின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டதின்படி, நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் அலுவலக கடித ந.க.எண்.23, தேனி மா-2, நாள்.16.02.2023, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், உள்ளாட்சி உபளயோகத்திற்கான இடம் 65.88ச.மீ மற்றும் (பூங்கா) 1185.36 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தினை மேதகு ஆளுநர் பெயருக்கு நகராட்சி ஆணையாளர் மூலம் தானமாக பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணத்தினை நகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் வாய்க்கால், குறுக்கு பாலங்கள் ஆகியவற்றினை மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர் மூலம் நல்லமுறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்று பொறியியல் கல்லூரி உதவி விரிவுரையாளர் மூலம் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி உத்தேச மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்வதற்கும் மின்கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைப்பதற்கும் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்வதற்கு, நகராட்சி பொறியாளர் மூலம் பெறப்பட்ட உத்தேச திட்ட மதிப்பீட்டின்படி ரூ.986700/-ஐ மனைப்பிரிவு உரிமையாளர்கள் நகராட்சியில் செலுத்தியுள்ளார்.

. எனவே, உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட LP/AD DTCP (TD) No.SWP/21/2023ன் படி 73 குடியிருப்பு மனைகள் அடங்கிய வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | 1.மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.1035/2023/எப்1 |
| | 2.நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 453, நாள்.29.05.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ....... | |

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்

நகர்மன்றத் தலைவர்

சின்னமனூர் நகராட்சி

// **உண்மை நகல்** //

ஆணையாளர்

சின்னமனூர் நகராட்சி.